நீங்கள் அவர்களுக்கு ஆடை!
அவர்கள் உங்களுக்கு ஆடை!
(திருக்குர்ஆன் 2:187)

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

## திருமண சிறப்பிதழ்

- ஜ இல்வாழ்க்கை இன்புற்றிருக்கவே!
- ஜ பாலியலை சமநிலைப்படுத்தும் வாழ்வியல்
- ஜ வாழ்க்கைத் துணை தேர்வு
- ஜ தட்சணை வரனுக்கா? வதுவுக்கா?
- ஜ தம்பதியரின் கடமை, உரிமைகள்
- ஜ குழந்தைச் செல்வங்களை காப்போம்!



# மணமக்களை எப்படி வாழ்த்துவது?

**... பாரகல்லாஹுலக வபாரக அலைக வஜமஅ பைனகுமா பீ கைர்...**

**பொருள்: இறைவன் உங்கள் இருவருக்கும் அருள் செய்வானாக! உங்கள் இருவருக்காக மற்ற பொருள்களிலும் அருள் செய்வானாக! உங்கள் இருவரையும் நல்லவற்றில் ஒன்றிணைப்பானாக!**

(நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மணமக்களை இவ்வாறு வாழ்த்தியதாக நபிமொழி நூல்களில் பதிவாகி உள்ளது (அஹ்மத், அபூதாவூத், திர்மிதி))

## திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

**வாசகர்கள் கவனத்திற்கு...**

- இவ்விதழைப் பெறவிரும்பும் அன்பர்கள் தங்களது தெளிவான விலாசத்தை 9886001357 என்ற எண்ணுக்கு SMS அனுப்பவேண்டும்.
- மாற்று மத அன்பர்களுக்கு இவ்விதழ் ஒரு வருடம் வரை அன்பளிப்பாக அனுப்பி வைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்பினால் அவர்கள் SMS மூலம் RESEND QNM என்று டைப் செய்து அனுப்பவேண்டும். சந்தா அனுப்பத் தேவையில்லை.
- முஸ்லிம் அன்பர்களுக்கு 4 மாதம் வரை இவ்விதழ் இலவசமாக அனுப்பிவைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்புவோர் சந்தா அனுப்பி புதுக்கிக் கொள்ள வேண்டும்.

● ஓராண்டு சந்தா : Rs. 60-    ● ஈராண்டு சந்தா Rs.120-


Published from:

**House of Peace,**
PO Box no. 1726,
No.8, 4th main, 2nd cross, LB Sastri nagar,
Bangalore 560017
**Ph. 9886001357    email: amkasim@yahoo.com**

Printed, published & edited by A.Mohamed Kasim on behalf of House of Peace, published from House of Peace, #8, 4th Main, 2nd cross, LB Sastry Nagar, Bangalore 560017 and printed at Print-O-Graph, Balaji complex, Sultanpet, Bangalore.
Registered News paper in India No.KARTAM/2007/28173

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய

அல்லாஹ்வின் திருப்பெயரால்...

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

## திருமண சிறப்பிதழ்

## பொருளடக்கம்


| | |
|---|---|
| இல்லறம் இனிதாக.... | 2 |
| திருமணத்தை புனிதமாக்கிடும் இறைமார்க்கம் | 4 |
| பாலியலை சமநிலைப்படுத்தும் வாழ்வியல் | 6 |
| வாழ்க்கைத் துணை தேர்வு | 8 |
| நல்ல துணையா? தீய துணையா? | 10 |
| திருமணம் நிறைவேற என்ன தேவை? | 12 |
| தட்சணை வரனுக்கா? வதுவுக்கா? | 14 |
| தொடரும் வரதட்சணை சாவுகள் | 15 |
| வரதட்சணையல்ல வதுதட்சணை இங்கே! | 16 |
| திருமணச் சிற்றுரை | 17 |
| பெண்பார்த்து மணமுடியுங்கள் | 18 |
| இல்வாழ்க்கை இன்புற்றிருக்கவே! | 19 |
| தம்பதியரின் கடமை, உரிமைகள் | 20 |
| கணவனின் கடமைகள் | 21 |
| மனைவியின் கடமைகள் | 22 |
| குழந்தைச் செல்வங்களை காப்போம்! | 23 |
| வாசகர் எண்ணம் | 25 |



published from

**House of Peace,**

PO Box No.1726

# 8, 4th main, 2nd cross, LB Sastry Nagar,

Bangalore 560 017 - Ph. 9886001357

# இல்வாழ்க்கை இனிதாக...

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது. ......... என்கிறது வள்ளுவனின் குறள்.

- 'மனைவி பிள்ளைகளிடத்தில் அன்பும், தேடிய பொருளை நட்பு சுற்றங்களுடன் பகிர்ந்து கொள்ளும் அறமும் இருந்தால் இல்வாழ்க்கை பண்பும் அதுவே பயனும் அதுவே.' என்று இதற்கு விளக்கமளித்து இருக்கிறார் சாலமன் பாப்பையா

- இல்வாழ்க்கை பண்புடையதாகவும் பயனுடையதாகவும் விளங்குவதற்கு அன்பான உள்ளமும் அதையொட்டிய நல்ல செயல்களும் தேவை என்கிறார் கலைஞர்.

செய்யுள்களிலும் கவிதைகளிலும் வர்ணிக்கப்படும் இல்வாழ்க்கை உண்மையில் அவ்வாறு பண்போடும் பயனோடும் அமைய வேண்டுமானால் அதற்கு முறையான இறையச்சமும் மறுமைக் நம்பிக்கையும் அங்கு கற்பிக்கப்பட வேண்டும். நாத்திகமும் முரண்பாடான தெளிவில்லாத கடவுள் கொள்கைகளும் அதற்கு அறவே உதவாது என்பது தெளிவு..

## முறையான இறையச்சமும் மறுமை நம்பிக்கையும்

மனிதன் தவறு செய்யாமல் அல்லது பாவம் செய்யாமல் வாழவேண்டுமானால் மிக மிக முக்கியமாக அவனுக்குள் இறையச்சம் இருக்கவேண்டும். அதாவது என்னைப் படைத்தவன் என்னை கண்காணித்துக் கொண்டிருக்கிறான். நான் செய்யும் செயல்களுக்கு நாளை அவனிடம் விசாரணை உள்ளது, பாவம் செய்தால் அவன் என்னை தண்டிப்பான் என்ற உணர்வு மனிதனுக்குள் விதைக்கப் படவேண்டும். அது இல்லாத பட்சத்தில் எந்தப் பாவம் செய்யவும் மனிதன் சிறு தயக்கமும் இல்லாமல் துணிகிறான். இன்று நாட்டில் உயிரற்ற உணர்வற்ற உருவங்களைக் காட்டி இவைதான் கடவுள் என்று சிறு வயது முதலே கற்பித்து வருவதன் விளைவாக மனிதனிடம் கடவுள் பயமே இல்லாமல் போய்விடுகிறது. இஸ்லாம் தனது தெளிவான கடவுள் கொள்கை மூலம் இந்த அபாயகரமான போக்கைத் தடை செய்கிறது.

நபியே நீர் கூறுவீராக! "இறைவன் – அவன் ஒருவனே. அவன் தேவைகள் ஏதும் இல்லாதவன். அவன் எவரையும் பெற்றெடுக்கவில்லை அவனையும் யாரும் பெற்றெடுக்கவில்லை. அன்றியும் அவனைப்போல் எவரும் எதுவும் இல்லை." (திருக்குர்ஆன் 112:1 – 4)

இவ்வாறு இறைவனின் தன்மைகளைத் தெளிவாக போதித்து அவனை மட்டுமே மனிதன் வணங்க வேண்டும் என்றும் அவனை

இடைத்தரகர்கள் இன்றி நேரடியாக வழிபட வேண்டும் என்றும் கற்றுக் கொடுக்கிறது. அத்துடன் இவ்வுலக வாழ்வின் நோக்கம் மனிதனைப் பரீட்சிப்பதே என்பதையும் இவ்வுலகில் மனிதன் செய்யும் செயல்களுக்கு மறுமையில் விசாரணை உண்டு என்பதையும் மறுமையில் நல்லோர்க்கு சொர்க்கமும் தீயோர்க்கு நரகமும் காத்திருக்கிறது என்பதையும் அறிவுப்பூர்வமாக கூறுகிறது.

ஒவ்வோர் ஆத்மாவும் மரணத்தைச் சுகித்தே ஆகவேண்டும் அன்றியும் – இறுதித் தீர்ப்பு நாளில்தான், உங்க(ள் செய்கைக)ளுக்குரிய பிரதிபலன்கள் முழுமையாகக் கொடுக்கப்படும். எனவே எவர் (நரக) நெருப்பிலிருந்து பாதுகாக்கப்பட்டுச் சுவர்க்கத்தில் பிரவேசிக்குமாறு செய்யப்படுகிறாரோ. அவர் நிச்சயமாக வெற்றியடைந்து விட்டார். இவ்வுலக வாழ்க்கை மயக்கத்தை அளிக்கவல்ல (அற்ப இன்பப்) பொருளேயன்றி வேறில்லை. (திருக்குர்ஆன் 3:185)

அந்த நிரந்தர இன்பங்களால் நிறைந்த சொர்க்கத்தை அடைவதை இலட்சியமாகக் கொண்டு அவன் விதிக்கும் ஏவல் விலக்கல்களைப் பேணி வாழ்வதில் சில சிரமங்கள் இருந்தாலும் அவை வீண்போவதில்லை என்ற நம்பிக்கையை தனி மனித ஒழுக்கத்திற்கு அடிப்படையாக்குகிறது இஸ்லாம்.
இந்த அடிப்படையை அனைவரும் பேணி வாழ்ந்தால் அங்கு ஆரோக்கியமான சமூகம் அமையும். சுயகட்டுப்பாடு, பொறுப்புணர்வு, சகிப்புத்தன்மை, தியாகம் போன்ற அரிய பண்புகள் தனிநபர்களில் உருவாகும். பரஸ்பர அன்பு, உரிமை மற்றும் கடமை பேணுதல், விட்டுகொடுத்தல், கூட்டுறவு போன்றவற்றால் குடும்ப உறவுகள் செழிக்கும்.

அவ்வாறு அமைய வேண்டுமானால் நாம் காலதாமதமின்றி மக்களின் சீர்திருத்தத்திற்கான வழிகளை கைகொள்ளவேண்டும். அதற்கு மேற்கண்ட என்ற உறுதியான நம்பிக்கைகளை மனித மனங்களில் நிலைநாட்டி இறைவன் கற்பிக்கும் ஏவல் விலக்கல்களை பேணி வாழும் பண்பை சிறுவயது முதலே மக்களுக்குக் கற்றுக் கொடுக்க ஆவன செய்யவேண்டும். அப்போதுதான் அங்கு பெற்றோரை மதிக்கும் பிள்ளைகளும், பொறுப்புணர்வு உள்ள பெற்றோர்களும், கணவனை மதிக்கும் மனைவிகளும் மனைவியை மதிக்கும் கணவன்மார்களும் சகோதரத்துவமும் சமத்துவமும் பேணும் சமூகமும் உருவாகும். பூமியே சிறந்த ஒரு வாழ்விடமாக மாறும் என்பதில் ஐயமில்லை.

# திருமணத்தை புனிதமாக்கிடும் இறைமார்க்கம்

மனிதனது வாழ்க்கை பல குழப்பங்கள், சிக்கல்கள், சஞ்சலங்கள் போன்ற எண்ணற்ற இடர்களுடன் பின்னிப்பிணைந்த ஒரு கலவையாக இருப்பதனை நாம் உணர்கின்றோம். இந்த சிக்கல்களிலேயே மனிதனை ஆட்டிப்படைப்பது, அவனது பாலியல் உணர்வுகள் என்பதில் ஐயமில்லை. படித்தவர்கள் முதல் பாமரர்கள் வரை இந்த விடயத்தில் தடம் புரள்வதை நாம் கண்டு வருகிறோம். எனவே இந்த உணர்வுகளைப்படைத்த இறைவன் அதற்கான வடிகாலையும் செவ்வனே மனித சமூகத்திற்குத் தந்து இல்வாழ்க்கையென இனிக்க வைத்துள்ளமை ஒரு மாபெரும் அருட்கொடையே!

● **நீங்கள் மன நிம்மதி பெறுவதற்காக உங்களிலிருந்தே உங்கள் ஜோடிகளைப் படைத்திருப்பதும் உங்களிடையே அன்பையும், நேசத்தையும் உண்டாக்கிருப்பதும், அவனது அத்தாட்சிகளில் உள்ளதாகும். சிந்தித்து உணரக்கூடிய சமூகத்திற்கு நிச்சயமாக இதில் (பற்பல) அத்தாட்சிகள் உள்ளன. (அல்குர்ஆன் 30:21)**

● **அவனே நீரிலிருந்து மனிதனைப் படைத்தான். அவனுக்கு (பிறப்பினால் வந்த) இரத்த சம்பந்தமான உறவுகளையும், (திருமணத்தால் வந்த) சம்பந்தி உறவுகளையும் ஏற்படுத்தினான். (திருக்குர்ஆன் 25:54)**

ஒருபுறம் பாலியல் உணர்வுகளை எப்படி வேண்டுமானாலும் நிறைவேற்றிக்கொள்ளும் வரம்புகளற்ற காட்டுமிராண்டித்தனத்தையும் அதன் விளைவாக கர்ப்பம் சுமந்த பின் கைவிடப்படும் கன்னிப்பெண்களையும் அதை தொடர்ந்து வளரும் தந்தைகளற்ற தலைமுறைகளையும் காண்கிறோம்.

மறுபுறம் சிலர் மதக்கட்டுப்பாடுகள் என்று சொல்லியும் திருமணம் ஆன்மீகத்துக்கு எதிரானது என்று சொல்லியும் மனித இயற்கைக்கு எதிரான துறவறத்தை வலியுறுத்துவதையும் காண்கிறோம். அதன் விபரீதமான விளைவுகளை ஊடகங்கள் இன்று தோலுரித்துக் காட்டுவதையும் கண்டு வருகிறோம்!

ஆனால் இந்த இயற்கையான உணர்வுகளைத் துறந்து சந்நியாசம் மேற்கொள்ள இறைவன் கூறவில்லை. பாலியல் உணர்வுகளை முறைப்படி வடிகாலிட திருமணம் என்ற ஏற்பாட்டை புனிதமாக்கியுள்ளது இஸ்லாம். பொறுப்புணர்வோடு இல்லறத்தை அனுபவிப்பதை வழிபாடு என்று சொல்லி வழிகாட்டுகிறது இஸ்லாம். காதலையும் காமத்தையும் திருமண உறவு மூலம் அனுபவித்து அதன் மூலம் பிறக்கும் குழந்தைகளை பொறுப்புணர்வோடு வளர்த்து வலுவான சமூக அமைப்பை கட்டியெழுப்ப

வழிவகை செய்கிறது இறைவனின் மார்க்கம். திருமணம் செய்து கொள்வதைக் கட்டாய கடமை என்கிறான் இறைவன்....

**உங்களில் வாழ்கை துணையில்லாதவருக்கும், உங்களுடைய ஆண் அடிமைகளுக்கும், இன்னும் நல்லொழுக்கமுள்ள அடிமைப் பெண்களுக்கும் திருமணம் செய்து வையுங்கள். அவர்கள் ஏழைகளாக இருந்தால் அல்லாஹ் தன்னுடைய பேரருளைக் கொண்டு அவர்களை செல்வந்தர்களாக்கி வைப்பான். மேலும் அல்லாஹ் மிக்க விசாலமானவன் நன்கறிந்தவன். ( அல்குர்ஆன் *24:32*)**

ஒருமுறை நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் தனது தோழர்களிடம்

"... இறைவனைத் துதிக்கும் ஒவ்வொரு துதிச் சொல்லும் (சுப்ஹானல்லாஹ்) தர்மமாகும் இறைவனைப் பெருமைப்படுத்தும் ஒவ்வொரு சொல்லும் (அல்லாஹு அக்பர்) தர்மமாகும் ஒவ்வொரு புகழ்மாலையும் (அல்ஹம்து லில்லாஹ்) தர்மமாகும் ஒவ்வொரு ''ஓரிறை உறுதிமொழி''யும் (லா இலாஹ இல்லல்லாஹ்) தர்மமாகும் நல்லதை ஏவுதலும் தர்மமே தீமையைத் தடுத்தலும் தர்மமே உங்களில் ஒருவர் தமது பாலுறுப்பி(னைப் பயன்படுத்துகின்ற விதத்தி)லும் தர்மம் உண்டு'' என்று கூறினார்கள். மக்கள், ''இறைத்தூதரே! எங்களில் ஒருவர் (தம் துணைவியிடம்) இச்சைகளைத் தீர்த்துக்கொள்வதற்கும் நன்மை கிடைக்குமா?'' என்று கேட்டார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள், ''(நீங்களே) சொல்லுங்கள், தடைசெய்யப்பட்ட வழியில் அவர் தமது இச்சையைத் தீர்த்துக்கொண்டால் அவருக்குக் குற்றம் உண்டல்லவா! அவ்வாறே அனுமதிக்கப்பட்ட வழியில் அவர் தமது இச்சையை நிறைவேற்றிக்கொள்ளும்போது அதற்காக அவருக்கு நன்மை கிடைக்கவே செய்யும்!'' என்று விடையளித்தார்கள் (அறிவிப்பவர் : அபூதர் (ரலி) அவர்கள் புகாரி 1832)

# பாதுகாக்கவேண்டிய உறுப்புகள்

● மனிதர்களை அதிகமாக சொர்க்கத்தில் நுழைவிக்கக் கூடியது எது? என நபி (ஸல்) அவர்களிடம் வினவப்பட்ட போது, இறையச்சமும் நன்னடத்தையுமே என பதிலளித்தார்கள். நரகில் மனிதர்களை எது அதிகம் நுழைவிக்கும்? என கேட்கப்பட்ட போது, வாயும் பாலுறுப்பும் என பதிலளித்தார்கள்.

அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி)

நூல்கள்: அஹ்மத் (7566), திர்மிதீ (1927),

# பாலியலை சமநிலைப்படுத்தும் வாழ்வியல்

ஆன்மிகம் என்றாலே துறவறம்தான் என்ற மாயையை உடைத்து மனித உணர்வுகளுக்கும் ஆசாபாசங்களுக்கும் உரிய முறையில் மதிப்பளித்து மனித வாழ்வையே நல்லறமாக்க வழிகாட்டுகிறது இஸ்லாம். மனிதனின் பாலியல் உணர்வுகளை அடக்கியாண்டு ஆன்மிகம் காணச் சொல்லவில்லை அது. மாறாக பாலியல் உணர்வுகளை ஆரோக்கியமான முறையில் சமூகத்திற்கு பங்கம் வராத முறையில் தீர்த்துக்கொள்ளவும் அதன் விளைவுகளுக்குப் பொறுப்பேற்றுக் கொள்ளவும் இளைஞர்களுக்கு பணிக்கிறது இஸ்லாம். எப்படி?

● நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் எங்களிடம், ''இளைஞர் சமுதாயமே! உங்களில் தாம்பத்தியம் நடத்த சக்தி பெற்றோர் திருமணம் செய்து கொள்ளட்டும். அது (தகாத) பார்வையைக் கட்டுப்படுத்தும் கற்பைக் காக்கும். அதற்கு இயலாதோர் நோன்பு நோற்றுக் கொள்ளட்டும்! ஏனெனில் நோன்பு, (ஆசையைக்) கட்டுப்படுத்தக்கூடியதாகும்'' என்று கூறினார்கள். - அறிவிப்பு அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி) ( புகாரி 2712)

இங்கு சக்தி என்பது உடல்நலம் மற்றும் பெண்ணுக்கு நல்கவேண்டிய மஹர் என்ற மணக்கோடையைக் குறிக்கும். இஸ்லாம் வரதட்சணையை முழுக்க முழுக்க தடைசெய்து அதற்கு நேர்மாற்றமாக மஹர் என்ற மணக்கொடையை மணமுடிப்பதற்கு முன்பாக மணப்பெண்ணுக்கு வழங்கக் கட்டளை இடுகிறது. இந்த மஹர் தொகையின் இந்த ஒரு நடைமுறையின் மூலம் இளைஞர்கள் தங்கள் பாலியல் உணர்வுகளைத் தணித்துக்கொள்ள வேண்டுமானால் அதற்காக உழைத்து சம்பாதிக்க வேண்டும் என்பது மட்டுமல்ல உணர்வுகளை தீர்த்துக் கொள்வதனால் உண்டாகும் விளைவுகளுக்கும் அவர்களே பொறுப்பேற்கும் நிலை உண்டாகிறது. அதாவது அந்த குடும்பத்தின் பராமரிப்புக்கும் அங்கு பிறக்கும் குழந்தைகளுக்கும் அவர்களை வளர்ப்பதற்கும் வினை விதைத்தவர்களே பொறுப்பேற்கும்போது ஒரு ஆரோக்கியமான சமூகம் அங்கு உடலெடுக்கிறது.

**துறவறம் கூடாது :**

அதே வேளையில் மனித இயற்க்கைக்கு மாற்றமான துறவறத்தையும் கட்டுப்பாடற்ற பொறுப்புணர்வற்ற பாலியல் நடவடிக்கைகளையும் தடை செய்கிறது இஸ்லாம்.

இறைவன் அனுப்பிய திருத்தூதர்கள் அனைவரும் திருமணம் முடித்து

இல்வாழ்க்கை வாழ்ந்து உண்மையான ஆன்மிகம் எது என்பதைக் கடைப்பிடித்து வாழ்ந்து காட்டிச் சென்றார்கள்.

● **உமக்கு முன் தூதர்களை அனுப்பினோம். அவர்களுக்கு மனைவியரையும் மக்களையும் ஏற்படுத்தினோம். (அல்குர்ஆன் *13:38*)**

அவ்வழியில் இறுதியாக வந்த நபிகள் நாயகம் (ஸல்) கூறினார்கள் :
“திருமணம் எனது வழிமுறையாகும். யார் எனது வழிமுறையைப் பின்பற்றவில்லையோ அவர் என்னைச் சேர்ந்தவர் அல்ல.”

## தகாத உறவுகளுக்குத் தடை

திருமண உறவுகளுக்கு அப்பாற்பட்ட அந்நிய ஆண்கள் மற்றும் அன்னியப் பெண்கள் இடையேயான அனைத்து உறவுகளும் இறைவனிடம் சட்ட விரோதமானவையே! காதல் என்ற பெயரில் இன்று நடந்துவரும் அந்நிய ஆண் பெண் பழகுதல், பேசுதல், ஒன்றாக இருத்தல் கூடிக்குலவுதல் போன்ற அனைத்துமே இறைவனிடம் தண்டனைக்குரிய குற்றங்களாகும்.

ஒரு ஆண் மனைவியை மட்டுமே காதலிக்க முடியும். ஒரு பெண் கணவனை மட்டுமே காதலிக்க முடியும். இதற்கு அப்பாற்பட்ட அனைத்தும் கள்ளக்காதல்களே! இது ஒரு தீவிரவாதமாக சிலருக்குப் படலாம். ஆனால் ஒரு ஒழுக்கம் நிறைந்த சமுதாயம் உருவாக வேண்டும் என்று விரும்புவோர் மட்டுமே இதை நியாயம் என்று உணர்வார்கள்!

## வரம்பு மீறுவோரின் நிலை

இறைவன் விதித்த வரம்புகளை மீறி காதலுக்கும் காமத்துக்கும் உடல் இச்சைக்கும் தங்களைப் பறிகொடுப்பவர்கள் சமூகத்தில் பல சீர்கேடுகள் உண்டாக காரணமாக அமைகிறார்கள். திருமண உறவுக்கு அப்பாற்பட்டு உண்டாகும் காதல் முற்றி காமத்தில் முடியும்போது அதில் ஈடுபட்டோரின் குடும்பங்களில் உண்டாகும் குழப்பங்களுக்கும் கலகங்களுக்கும் சமூக சீர்கேடுகளுக்கும் அதன்மூலம் உண்டாகும் விளைவுகளுக்கும் இவர்கள் இறைவனிடம் பதில் சொல்லியே ஆகவேண்டும். உதாரணமாக அதில் உண்டாகும் சிசுக்கள் கொலை செய்யப்பட்டாலும் அனாதைகளாக சமூகத்தில் வாழ்ந்தாலும் இவர்களின் பாவம் இவர்களை இறுதி நாள்வரை விடுவதில்லை. அப்பாவம் எவ்வளவு சிறியதாக இருந்தாலும் சரியே!

***99:7,8*** **(இறுதித்தீர்ப்பு நாளன்று) எவர் அணுவளவு நன்மை செய்தாலும் அவர் அதனை கண்டுகொள்வார், அணுஅளவு தீமை செய்தாலும் அதனைக் கண்டுகொள்வார்.**

எனவே இவ்வாழ்க்கை என்ற பரீட்சையில் சஞ்சலங்களுக்கு இடம்

கொடாமல் பாலியல் உணர்வுகளைக் கட்டுப்படுத்தி கவனமாக செயல்பட்டால் நாம் நிரந்தர இன்பங்கள் நிறைந்த மற்றும் சொர்க்கத்தை சென்றடைவோம். ஆனால் இப்பரீட்சையை உதாசீனமாக எடுத்துக்கொண்டு தான்தோன்றித்தனமாக செலவிட்டால் நாம் சென்று வீழ்வது நரகப்படுகுழியில்தான் அதுவோ முடிவில்லாத நிரந்தரமான இருப்பிடமாகும்.

**78:21 நிச்சயமாக நரகம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது. வரம்பு மீறியவர்களுக்குத் தங்குமிடமாக! அதில் அவர்கள் பல யுகங்களாகத் தங்கியிருக்கும் நிலையில். அவர்கள் அதில் குளிர்ச்சியையோ குடிப்பையோ சுவைக்கமாட்டார்கள்!...... கொதிக்கும் நீரையும் சீழையும் தவிர.!**

# வாழ்க்கைத் துணை தேர்வு

ஆரோக்கியமான ஒரு சமூகக் கட்டமைப்பின் ஆரம்பமே நல்ல வாழ்க்கைத் துணையை தேர்தேடுப்பதில்தான் உள்ளது.. வாழ்க்கைத் துணையைத் தேர்வு செய்வதில் எத்தனையோ அம்சங்களைக் கவனிக்க வேண்டும் என்றாலும் பருவ வயதையடைந்தவர்கள் வெறும் புறக்கவர்ச்சியில் மயங்கி எதிர்கால மகிழ்ச்சியைத் தொலைத்து விடுகின்றனர். சமூகத்தின் சீரழிவுக்கும் காரணமாகின்றனர்.

மோகமும் காமமும் முற்றியிருக்கும் சந்தர்ப்பங்களில் தனது துணையின் கோபமும் கூட கவர்ச்சிகரமானதாகத் தோற்றமளிக்கும். சில மாதங்களில் எதார்த்த நிலைக்கு வந்த பிறகுதான் எத்தனையோ விஷயங்களை கவனிக்கத் தவறிவிட்டோம் என்ற உண்மை உறைக்கும். வாழ்க்கை முழுவதும் நரகமாகி விட்டதை அப்போது தான் உணர்வார்கள். இவ்வாறு மகிழ்ச்சியைத் தொலைத்த பலரை நாம் அன்றாடம் சந்திக்கிறோம்.

குறிப்பாக இளம்பெண்கள் இத்தகைய இனக்கவர்ச்சிக்கு வசப்பட்டுவிட்டால் ஆண்களால் ஏமாற்றப்பட்டு கர்பிணிகளாக்கப்பட்டு கைவிடப்படுகின்றனர். சிலவேளை சிவப்பு விளக்குப் பகுதியில் கூட விற்கப்படுகின்றனர்.

இந்த இனக்கவர்ச்சியில் மயங்காமல் எதார்த்தத்தைப் புரிந்து கொண்டு நடப்பது எப்படி? இதை வென்றெடுக்கும் வழி என்ன?

இதற்குத்தான் தெளிவான முறையில் இறைவன் தனது திருமறை மூலமும் திருத்தூதர் மூலமும் வழிகாட்டுகிறான். இறைநம்பிக்கையை முக்கிய அளவுகோலாகக் கூறுகிறான் இறைவன்.

'இறைவனுக்கு இணைவைக்கும் பெண்ணை – அவர்கள் இறைநம்பிக்கை கொள்ளும் வரை நீங்கள் திருமணம் செய்யாதீர்கள்! இறை நம்பிக்கையுடைய அடிமைப் பெண் (அடிமையல்லாத) இணைவைக்கும்

பெண்ணை விடச் சிறந்தவள். அவள் உங்களைக் கவர்ந்தாலும் சரியே!

உங்கள் பெண்களை இணைவைக்கும் ஆண்களுக்கு – அவர்கள் இறைநம்பிக்கை கொள்ளும் வரை – மணமுடித்துக் கொடுக்காதீர்கள். இறைநம்பிக்கையுடைய அடிமையான ஆண் (அடிமையில்லாத) இணைவைக்கக் கூடிய ஆணைவிடச் சிறந்தவன். அவன் உங்களைக் கவர்ந்தாலும் சரியே!

(இணை வைக்கும்) அவர்கள் நரகத்தின் பால் உங்களை அழைக்கின்றனர். அல்லாஹ்வோ தனது உத்தரவின் மூலம் மன்னிப்பின்பாலும் சொர்க்கத்தின் பாலும் அழைக்கிறான். அல்லாஹ் தனது வசனங்களை மக்கள் படிப்பினை பெறுவதற்காக தெளிவுபடுத்துகிறான்'. (அல்குர்ஆன் 2:221)

(அல்லாஹ் என்றால் வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன் என்று பொருள்)

'விபச்சாரன் விபச்சாரியையோ அல்லது இணை வைத்து வணங்குபவளையோ அன்றி வேறு எந்த பெண்ணையும் திருமணம் செய்யமாட்டான், விபச்சாரி விபச்சாரணையோ அல்லது இணைவைத்து வணங்குபவனையோ அன்றி (வேறு எவரையும்) திருமணம் செய்ய மாட்டாள். இது இறை நம்பிக்கையாளர்களுக்கு விலக்கப்பட்டிருக்கிறது.' (அல்குர்ஆன் 24:3)

● நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

.''நான்கு நோக்கங்களுக்காக ஒரு பெண் மணமுடிக்கப்படுகிறாள்.

1. அவளது செல்வத்திற்காக 2. அவளது குடும்பத்திற்காக 3. அவளது அழகிற்காக 4. அவளது மார்க்கத்திற்காக..... மார்க்கம் உடைய பெண்ணை மணந்து வெற்றியடைந்து கொள்.''

அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி) (நூல்: புகாரி 5090)

மார்க்கம் என்றால் இறைவனின் கட்டளைகளைப் பேணி வாழும் பண்பைக் குறிக்கும்.

இந்த உலக வாழ்க்கையோடு எல்லாம் முடிந்து விடுகிறது என்ற எண்ணம்தான் எப்படியாவது இந்த உலகத்தை அனுபவித்து விடத் தூண்டுகிறது. சிந்தனைக்குத் திரை போடுகிறது. இந்த உலக வாழ்க்கை ஒரு நாள் முடிவுக்கு வரும். ஒரு கட்டத்தில் இந்த உலகம் அழியும். அழிந்த பின் அனைவரும் இறைவன் முன்பாக நிறுத்தப்படுவோம். அவரவர் செய்த நன்மை தீமைகளின் அடிப்படையில் சொர்க்கமோ நரகமோ பெறுவார்கள் என்பதை யார் உறுதியுடன் நம்புகிறார்களோ அவர்கள் மட்டுமே இந்த இனக்கவர்ச்சியை வெல்ல முடியும்.

இந்த நம்பிக்கையையூட்டி நமது சந்ததிகளை வளர்ப்பதால் மட்டுமே இன்று மக்கள் அனுபவித்துவரும் விபரீதங்களில் இருந்து அவர்களைக் காப்பாற்ற முடியும். 'மனிதன் யாரை நேசிக்கிறானோ அவனுடன்தான் மறுமையில் இருப்பான்' என்பது நபிமொழி.

# நல்ல துணையா? தீய துணையா?

இக்கேள்வியை நீங்கள் இவ்வாறும் கேட்கலாம்...
ஒழுக்கமான குடும்பமா? ஒழுக்கமில்லா குடும்பமா?
நல்ல பிள்ளைகளா? தீய பிள்ளைகளா?
அமைதியா? கலகமா?
சொர்க்கமா? நரகமா?

ஆம், அனைத்தையும் உங்கள் வாழ்க்கைத் துணையின் தேர்வுதான் முடிவு செய்கிறது!

படைத்த இறைவனுக்கு பதிலாக படைப்பினங்களைக் கடவுள்களாக வணங்குபவர்களும் இறைவனை மறுத்து வாழும் நாத்திகர்களும் தங்கள் செயல்களுக்கு விசாரணை உண்டு என்று நம்புவதில்லை. அதனால் அவர்கள் எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்ற கொள்கையைக் கொண்டிருப்பார்கள். இறைநம்பிக்கையாளர்கள் ஒருபோதும் அவர்களை வாழ்க்கைத் துணைவர்களாக ஏற்றுக்கொள்ளக் கூடாது.

பெரும்பாலான குடும்பங்களின் அமைதி இன்மைக்கும் சீரழிவுக்கும் காரணம் இந்த அடிப்படை பேணப்படாமல் வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தேடுப்பதால்தான் என்பதை அனுபவசாலிகள் அறிவார்கள். பருவக்கோளாறினால் காதலுக்கும் காமத்துக்கும் ஆட்பட்டு வாழ்க்கைத் துணைகளை தேர்ந்தெடுக்கும்போது திருமணம் ஆன நாள் முதலே கலவரங்கள் துவங்கி விடுகின்றன.

● பெற்று வளர்த்த தாய் தந்தையர்களைத் துண்டித்து விட்டு தன்னிச்சையாக வாழமுற்படுவோருக்கு நிம்மதி என்பது நீண்டகாலம் நிலைத்திருக்க சாத்தியமில்லை. அவர்கள் செய்த அதே பாவத்தை பிற்காலத்தில் அவர்களது பிள்ளைகள் அவர்களுக்கு செய்கிறார்கள்.

● அழகுக்கும் குலப்பெருமைக்கும் செல்வத்துக்கும் முன்னுரிமை கொடுத்து மணமகனையோ மணமகளையோ தேர்ந்தெடுக்கும் போது சூழ்நிலை மாற்றங்களுக்கு ஏற்றவாறு பரஸ்பரம் அனுசரித்து போகும் பண்பு தம்பதியரிடையே அடிபட்டு போகிறது. எதற்கு இவர்கள் முன்னுரிமை கொடுத்தார்களோ அவை குறையும்போது உண்டாகும் அதிர்வலைகள் இவர்களின் இல்வாழ்க்கையைத் நிலைகுலைய வைத்து விடுகின்றன.

● நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

“பெண்களை அவர்களின் அழகுக்காக மணம் முடிக்காதீர்கள். அவர்களின் அழகு அவர்களை அழித்து விடலாம், அவர்களின் செல்வத்திற்காக மணம் முடிக்காதீர்கள். அவர்களின் செல்வம் அவர்களை தடுமாறி தவற செய்து விடலாம், அவர்களின்

நல்லொழுக்கத்திற்காக மணம் முடியுங்கள். நல்லொழுக்கமுள்ள அழகற்ற அடிமைப்பெண் (தீய ஒழுக்கமுள்ள) அழகிய பெண்ணை விட மேலானவள்"

அறிவிப்பு: அப்துல்லாஹ் பின் அமர் (ரலி), ஆதாரங்கள்: இப்னு ஹிப்பான், முஸ்னத் அஹ்மத்.

## நல்ல துணையால் நலமே விளையும்

மாறாக இறையச்சமும் இஸ்லாம் கற்பிக்கும் கடமைகளை நிறைவேற்றும் பண்பும் கொண்ட ஒருவரை நமது வாழ்க்கைத் துணையாக தேர்ந்தேடுப்போமானால் இல்லற வாழ்வு ஒழுக்கமுள்ளதாக அமையும். இஸ்லாத்தின் அடிப்படைகளான ஒன்றே மனித குலம், படைத்த இறைவன் மட்டுமே வணக்கத்திற்குத் தகுதி வாய்ந்தவன், அவனிடமே நமது மீளுதல் உள்ளது, அவனுக்கு மறுமையில் பதில் சொல்லியாக வேண்டும் என்று உறுதியாக நம்பும் இருவர் கணவன் மனைவியாக இணையும்போது அங்குதான் உண்மையான அன்பும் பாசமும் தழைத்தோங்கும் குடும்பமும் நல்லொழுக்கமுள்ள தலைமுறைகளும் உருவாகும். இறைவனின் பொருத்தத்தைப் பெற்றால் மறுமையில் நிரந்தர இன்பங்கள் நிறைந்த சொர்க்கத்தால் பரிசளிக்கப்படுவோம் என்ற நம்பிக்கை தம்பதியரிடையே விட்டுக்கொடுக்கும் பண்பையும் குடும்ப நலனுக்காக தன்னலத்தை தியாகம் செய்யும் மனப்பான்மையையும் வளர்க்கும். இறைவனிடம் பதில் சொல்லியாகவேண்டும் வேண்டும் என்ற நம்பிக்கை குடும்ப அங்கங்களிடையே அவரவர் செய்யவேண்டிய கடமைகள் பற்றிய பொறுப்புணர்வை உண்டாக்கும். அவ்வுணர்வு மற்றவர்களின் உரிமைகளை மதிக்கவும் அவற்றை மீறுவதில் இருந்து தடுக்கவும் செய்யும்.

## கட்டுப்பாடு நிறைந்த குடும்பம்

இஸ்லாம் என்பது தான்தோறித்தனத்துக்கு நேர் எதிரானது. இது படைத்த இறைவனால் வகுத்தளிக்கப் படும் வாழ்க்கை நெறி. மற்ற மதங்களில் உள்ளதுபோல ஒரு குறிப்பிட்ட நாள் மட்டும் கடவுளைக் கும்பிடும் முறையல்ல இஸ்லாமில் உள்ளது. மாறாக தினமும் ஐவேளைத் தொழுகையை நிறைவேற்றுவதோடு குடும்ப அங்கங்கள் ஒவ்வொருவரதும் கடமையும் உரிமையும் வரையறுத்துக் கூறுகிறது இஸ்லாம். அவற்றை சரிவர நிறைவேற்றுவதும் வழிபாடு என்கிறது இஸ்லாம். ஆம் இங்கு வாழ்க்கையே வழிபாடு, வழிபாடே வாழ்க்கை! இதன் காரணமாக கணவன், மனைவி, குழந்தைகள், உறவினர்களிடையே கட்டுப்பாட்டை வலியுறுத்தவும் குடும்ப அங்கங்களுக்கு இடையே உண்டாகும் பிரச்சினைகளுக்கு இறைவனின் வழிகாட்டுதல்களின் அடிப்படையில் தீர்வுகளைக் காணவும் முடிகிறது.

# திருமணம் நிறைவேற என்ன வேண்டும்?

பருவம் அடைந்த ஒரு ஆணும் பெண்ணும் தங்கள் பெற்றோர்களைப் புறக்கணித்துவிட்டு தங்களிஷ்டம்போல் திருமணப் பதிவு அலுவலகத்திலோ கோவிலிலோ மணமுடித்துக் கொள்வதை அன்றாடம் கண்டுவருகிறோம். ஆனால் இஸ்லாம் இத்தகைய பொறுப்பற்ற திருமணங்களுக்கு ஒருபோதும் அங்கீகாரம் கொடுப்பதில்லை.

திருமணத்திற்கு மணமகன், மணமகள் மட்டும் இருந்தால் போதாது. திருமணம் என்பது ஒரு கண்ணியமிக்க வாழ்க்கை ஒப்பந்தம். அது வெறும் மணமகன் மணமகள் சம்பந்தப்பட்ட விடயம் அல்ல. அதில் உருவாகும் தலைமுறைகளையும் சம்பந்தப்பட்டவர்களின் குடும்பங்களையும் சமூகத்தையும் பாதிக்கும் விடயம். அதில் ஈடுபடுபவர்கள் பொறுப்புணர்வோடு நடந்து கொள்ள வகை செய்யும் வகையில் கீழ்கண்டவற்றை கட்டாய தேவைகளாக கற்பிக்கிறது இஸ்லாம்:

1. மணமகளுக்காக ஒரு பொறுப்பாளர் (வலீ)-
2. இருநீதமுள்ள சாட்சிகள்
3. மணமகளின் முழுமையான சம்மதம்
4. மணமகளின் உரிமையான மஹர் தொகை

**வலி -** இஸ்லாமிய வழக்கில் மணமகளின் பொறுப்பாளர் வலி என்று அறியப்படுவார். மணமகளின் தந்தை, சகோதரன் போன்ற ஆண் உறவினர்கள் வலி ஆகலாம். வலி குறிப்பிட்ட மஹர் தொகையை மணமகனிடம் இருந்து பெண்ணின் சார்பில் பெற்று மணப்பெண்ணை மணமுடித்துக் கொடுப்பதாக ஒப்பந்தம் நிறைவேறும்.

● நபி (ஸல்) கூறினார்கள்: எந்த ஒரு பெண் தன் பொறுப்பாளர் (வலீ) அனுமதியின்றி திருமண சம்மதம் தெறிவிக்கிறாளோ அத்திருமணம் செல்லாது, அத்திருமணம் செல்லாது, அத்திருமணம் செல்லாது. அப்பெண்ணுடன் உடலுறவு கொள்வதை மஹர் தொகை அனுமதிக்கிறது. எவளொருவளுக்கு வலீயில்லையோ அவளுக்கு அரசர் வலீயாவார். அறிவிப்பாளர்: ஆயிஷா (ரலி), ஆதாரங்கள்: அபூதாவூத், திர்மிதி.

## பெண் வலியாக முடியாது:

● நபி (ஸல்) கூறினார்கள்: ஒரு (மணப்) பெண்ணை மற்றொரு பெண் (வலீயாக இருந்து) மணம் செய்விக்கக் கூடாது. மணப்பெண் தன்னையே (வலீயின்றி) மணம் செய்தல் கூடாது.

அறிவிப்பு: அபூஹுரைரா (ரலி) ஆதாரங்கள்: இப்னுமாஜா, தாரகுத்னி, பைஹகி

# மணப்பெண்ணின் முழு சம்மதம் தேவை

● நபி (ஸல்) அவர்கள் தெளிவாக்கினார்கள்: விதவை மற்றும் விவாக முறிவுப் பெற்ற பெண்களை அவர்களது முழு சம்மதமின்றி திருமணம் செய்து வைக்காதீர்கள். கன்னிப் பெண்களிடம் திருமணம் விஷயமாக அனுமதி பெற வேண்டும். இறைத்தூதரே! ஒரு கன்னிப்பெண் (நாணத்தால் தன் எண்ணத்தைக்) தெளிவாகக் கூற வெட்கப்படுவாளே! என சிலர் வினவினார்கள்.

அதற்கு நபி(ஸல்) "அவளது மௌனமே சம்மதமாகும்" என்றார்கள்.

அறிவிப்பு: ஆயிஷா, இப்னு அப்பாஸ், அபூஹுரைரா (ரலி அன்ஹும்),

ஆதாரங்கள்: புகாரி, முஸ்லிம், அபூதாவூத்

● இறைவன் அறிவுறுத்துகிறான்: '**இறை நம்பிக்கை கொண்டவர்களே! பெண்களை (அவர்கள் மனப்பொருத்தம் இல்லாத நிலையில்) நீங்கள் பலவந்தப்படுத்தி அனந்தரமாகக் கொள்வது உங்களுக்குக் கூடாது.' (அல்குர்ஆன் 4:19)**

நபித்தோழி கன்சா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: எனது தந்தை கிதாம் (ரலி) அவர்கள் எனது (முழு சம்மதமின்றி) எனக்குப் பிடிக்காத இடத்தில் திருமணம் செய்து வைத்தார்கள். நான் நபி (ஸல்) அவர்களிடம் வந்து இதனைக் கூறியபோது அத்திருமணத்தை நபி (ஸல்) அவர்கள் ரத்து செய்தார்கள். ஆதாரங்கள்: முஅத்தா, அபூதாவூத்,

இதற்குப் பின் கன்சா (ரலி) அவர்கள் தனது முழு சம்மத்ததுடன் நபித்தோழர் அபூலுபாமா (ரலி) அவர்களை மணமுடித்ததாக அப்துல் ரஹ்மான் பின் யஜீத் (ரலி) அறிவிக்கும் ஹதீஸ் இப்னுமாஜாவில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

● மஹர் என்ற மணக்கொடை கொடுக்காமலும் திருமணம் நிறைவேறாது.

# திருமண விருந்து (வலீமா)

● திருமண விருந்து கொடுப்பது மணப்பெண்ணைச் சார்ந்தது அல்ல. மாறாக அது மணமகனையே சாரும். அதற்கு வலீமா என்று சொல்லப்படும்.

நபி (ஸல்) அவர்கள் எச்சரித்துள்ளார்கள்: எவரது "வலீமா" விருந்துக்கு செல்வந்தர்கள் அழைக்கப்பட்டு, ஏழைகள் மறுக்கப்படுகிறார்களோ அவர் இறைவனுக்கும் அவனது தூதருக்கும் மாறு செய்தவராவர்.

அறிவிப்பு: அபூஹுரைரா, இப்னு அப்பாஸ் (ரலி)

ஆதாரங்கள்: புகாரி, முஸ்லிம்

# தட்சணை வரனுக்கா? வதுவுக்கா?

நம் நாட்டில் திருமணத்தின் போது ஆண்கள் பெண்களிடமிருந்து வரதட்சணை வாங்குவதை காலாகாலமாக கண்டு வருகிறோம். ஆனால் இஸ்லாம் மார்க்கம் இவ்வழக்கத்தை தவறு என்று சொல்லி தடை செய்கிறது. மாறாக திருமணத்தின் போது ஆண்கள்தான் பெண்களுக்கு தட்சணை கொடுக்க வேண்டும் என்று அவர்களைக் கட்டாயமும் செய்கிறது.

திருமணம் என்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான ஒரு கண்ணியம் மிக்க ஒப்பந்தம். உண்மையில் இங்கு யார் யாருக்குக் கொடுப்பது சரியானது?

**● பெண்களின் சுமைகளும் பொறுப்புகளும்**

இந்த ஒப்பந்தத்தில் ஆண்கள் பெருமளவு பயன் அடைவதையும் பெண்கள் அதிகமாக கஷ்டங்களையும் சுமைகளையும் பொறுப்புகளையும் சுமப்பதையும் நாம் அறிவோம்.

முதலில் திருமணத்திற்காக பெண் இளம் பருவத்தில் தனது பெற்றோர்களையும் உடன்பிறப்புகளையும் தான் அதுவரை வளர்ந்த வீட்டையும் பிரிந்து கணவனின் வீட்டுக்கு வருகிறாள். கணவனுக்கு மட்டுமல்ல அவனது பெற்றோருக்கும் உறவுகளுக்கும் பணிவிடை செய்யும் நிர்பந்தத்துக்கு ஆளாகிறாள்.

சிறிது நேரம் இருவரும் உடல் இன்பத்தை அனுபவிப்பதில் மட்டும் சமமாக உள்ளனர். ஆனால் பின்விளைவுகளை பெண்தான் அதிகமாக சுமக்கிறாள். இவனது கருவைச் சுமப்பதால் ஏற்படும் சிரமங்கள், பிள்ளைப் பேற்றின் சிரமம், பாலூட்டும் சிரமம், குழந்தைகளை பராமரிக்கும் சிரமம் என்பவை போக குடும்பத்தாருக்கு சேவை செய்யும் சிரமம் என ஏராளமான துன்பங்களைப் பெண்தான் சுமக்கிறாள்.

எனவே ஆணைப் பொறுத்தவரை அவனுக்கு இங்கு அதிகமாக சுகம் மட்டுமே கிடைக்கிறது. எனவே தனக்காக இவ்வளவு தியாகங்களை சுமக்கும் பெண்ணுக்கு மஹர் என்னும் மணக்கொடையை மனமுவந்து கொடுக்கச் சொல்கிறான் இறைவன்:

**மணம் முடிக்கும் மணப்பெண்ணுக்குரிய (மஹர்) தொகையை முறைப்படி கொடுத்து விடுங்கள். (அல்குர்ஆன் 4:24,25)**

**● உழைப்பை ஊக்குவிக்கும் சோம்பேறித்தனத்தை போக்கும்**

அடுத்ததாக மஹர் என்னும் மணக்கொடை கட்டாயமாக்கப் பட்டால் நாட்டில் என்ன நடக்கும் என்பதையும் பாருங்கள்... மணக்கொடையை

பெண்ணுக்கு கொடுத்தால்தான் தனக்கு திருமணம் நடக்கும் என்று இளைஞர்கள் உணரும்போது அதற்காக வேண்டி உழைப்பார்கள். அதன் காரணமாக சோம்பேறித்தனம் அவர்களை விட்டு விலகி ஓடிவிடும். அந்த உழைப்பின் பலனைக் கொண்டு நாடும் செழிப்படையும்.

**● வரதட்சணை எனும் அநியாய சுமை**

பெண் மீது வரதட்சணை சுமை சுமத்தப்பட்டால் அதை அவளது தந்தையோ அல்லது பெண்ணின் சகோதரனோதான் சுமக்க வேண்டும். இந்த திருமண ஒப்பந்தத்தில் எந்தவிதத்திலும் பயனடையாத பெண்ணின் தந்தையின் மீதோ அல்லது அவளது சகோதரன் மீதோ பொருளாதாரச் சுமையை சுமத்துவது பெரும் அநியாயமே! பெண்ணை வளர்க்க பாடுபட்டது மட்டுமல்லாமல் அவளை இன்னொருவனுக்கு கொடுத்து அவனுக்கு கப்பமும் கட்டுவது அநியாயத்துக்கு மேல் அநியாயமே! மட்டுமல்ல அது அநியாயமாக குடும்ப சண்டைகளுக்கு வித்திடும்.

**● சமூகத்தின் சமநிலையையே தடுமாறச் செய்யும் அபாயம்**

இன்று பெண்கள் உயிருடன் கொளுத்தப்பட்டு கொலை செய்யப்படுவது, பெண்ணினம் கருவில் உருவாகும் போதே நவீன கருவிகள் மூலம் கண்டறியப் பட்டு அதைக் கொலை செய்வது, நீண்ட காலம் ஆகியும் திருமணமாகாமல் பெண்கள் விபச்சாரத்தை நோக்கி ஓடுவது போன்ற குடும்ப மற்றும் சமூக ரீதியான தீமைகள் அனைத்திற்கும் காரணமே வரதட்சணைதான் என்பது நாம் அனுபவித்தறிந்த உண்மை!

# தொடரும் வரதட்சணைச் சாவுகள் - சில புள்ளி விவரங்கள்

● இந்தியாவில் சராசரியாக ஒரு மணி நேரத்துக்கு ஒரு பெண் வரதட்சணைக் கொடுமை காரணமாக உயிரிழப்பதாக அதிகாரப்பூர்வ புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன.

● இந்தியா முழுவதும் 2012 ஆம் ஆண்டில் வரதட்சணைக் கொடுமை சம்பந்தமான உயிரிழப்புகளாக 8233 சம்பவங்கள் பதியப்பட்டுள்ளதாக நேசனல் க்ரைம் ரிக்கார்ட் பீரோ ***(National Crime Record bureau)*** வெளியிட்டுள்ள புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

● 2007 ஆம் ஆண்டு முதல் இந்த எண்ணிக்கை எட்டாயிரத்துக்கும் கூடுதலாகவே இருந்து வந்துள்ளது என்றும் தெரியவருகிறது. தவிர 2007 க்கும் 2011 க்கும் இடைப்பட்ட காலத்தில் இந்த எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்து வந்துள்ளது.

● வரதட்சணைக் கொடுமையால் பெண்கள் இறந்ததாக குற்றம்சாட்டப்படும் சம்பவங்களில் சராசரியாக 35 சதவீத வழக்குகளில் மட்டுமே குற்றம் நிரூபிக்கப்பட்டு குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளன.

● இந்தியாவில் வரதட்சணை ஒழிப்பு சட்டம் 1961 ஆம் ஆண்டே அமலுக்கு வந்துவிட்டாலும் இன்றளவும் சாவு எண்ணிக்கை அதிகரித்தே வருகிறது

தகவல்: ***http://www.newindia.tv***

# வரதட்சணை அல்ல, வதுதட்சணை இங்கே!

வரதட்சணை காரணமாக பெண்ணினம் இவ்வளவு அநீதிகளுக்கு உள்ளாகியும் அதை ஒழிக்க முடியாமல் திண்டாடும் நாட்டில் நாம் வாழ்ந்து வருகிறோம். இதற்குக் காரணம் முன்னோரின் அறியாமைப் பழக்க வழக்கங்களை கண்மூடித்தனமாக பின்பற்றி இறைவன் வழங்கும் வாழ்வியல் வழிகாட்டுதலை புறக்கணித்ததே என்பதை சிந்திப்போர் அறியலாம். ஆம், இஸ்லாத்தைப் பின்பற்றினால் இம்மையிலும் சாந்தி, மறுமையிலும் சாந்தியே!

இறைவன் ஆணையிடுகின்றான்:

- **நீங்கள் (மணம் புரியும்) பெண்களுக்கு அவர்களுடைய மஹர் (திருமணக்கொடை) மகிழ்வோடு கொடுத்துவிடுங்கள். அதிலிருந்து ஏதேனும் ஒன்றை மனமொப்பி அவர்கள் உங்களுக்குக் கொடுத்தால் அதை தாராளமாக மகிழ்வுடன் புசியுங்கள். (அல்குர்ஆன் 4:4)**
- **மணம் முடிக்கும் மணப்பெண்ணுக்குரிய (மஹர்) தொகையை முறைப்படி கொடுத்து விடுங்கள். (அல்குர்ஆன் 4:24,25)**
- **மணம் முடிக்கும் பெண்ணுக்கு ஒரு பொற்குவியலையே (மஹராக) கொடுத்த போதிலும், அதிலிருந்து எதனையும் (திரும்ப) எடுத்துக் கொள்ளாதீர்கள். (அல்குர்ஆன் 4:20)**

திருமணக்கொடை என்பது பெண்ணுக்குக் கொடுக்காமல் இஸ்லாத்தில் திருமணம் என்பது அறவே இல்லை. இதை எப்படியெல்லாம் கொடுக்கலாம் என்பதை நபிகளாரால் அங்கீகரிக்கப்பட்ட கீழ்கண்ட முன்மாதிரிகளில் இருந்து அறியலாம். ஆனால் பெண்ணின் ஒப்புதல் இதற்கு கண்டிப்பாக தேவை.

## தங்கம் அல்லது பொருள் வடிவில்....

- நபி (ஸல்) அவர்கள் வாழ்ந்த போது, அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) என்ற நபித்தோழர் பேரீத்தம் பழமளவு தங்கத்தை மஹராகக் கொடுத்து ஒரு மதீனத்து பெண்ணை மண முடித்தார்கள். அறிவிப்பு: அனஸ் பின் மாலிக் (ரலி). ஆதாரங்கள்: புகாரி, முஸ்லிம், அபூதாவுத், நஸயீ, தாரமி..

## இரும்பு மோதிரமும் மஹர் ஆகலாம்

- ஒரு இரும்பு மோதிரத்தையாவது மணப்பெண்ணுக்கு மஹராகக் கொடுத்து மணம் முடியுங்கள் என நபி (ஸல்) அவர்கள் எங்களுக்கு ஆணையிட்டார்கள் (ஹதீஸின் சுருக்கம்) அறிவிப்பு: ஸஹல் பின் ஸஅத் (ரலி) ஆதாரங்கள்: புகாரி, முஸ்லிம், அபூதாவுத், நஸயீ, தாரமி, திர்மிதி

## கல்வி கற்பிப்பதும் மஹர் ஆகலாம்

● ஒரு நபித் தோழரிடம் மஹராகக் கொடுக்க எந்த பொருளும் இல்லாததை அறிந்த ரசூல் (ஸல்) அவர்கள் "உனக்கு எதாவது திருக்குர்ஆன் வசனங்கள் தெரியுமா? எனக் கேட்டார்கள். அந்நபித்தோழர், தனக்கு இன்னின்ன குர்ஆன் வசனங்கள் தெரியுமென விடையளித்தார்கள். உடனே அந்த வசனங்களை மணப்பெண்ணுக்கு கற்றுக் கொடுப்பாயாக! அது அப்பெண்ணுக்குரிய மஹராகும்" என்றார்கள். அறிவிப்பு: ஸஹல் பின் ஸஅத் (ரலி) ஆதாரங்கள்: புகாரி, முஸ்லிம், அபூதாவுத், நஸயீ, தாரமி, திர்மிதி

## அரபு நாடுகளில் நிலைமை தலைகீழ்!

மஹர் கொடுக்கும் வழக்கத்தைப் பின்பற்றும் அரபு நாடுகளில் வரதட்சணைக் கொடுமை இல்லை. பெண்சிசுக்கொலைகளும் ஸ்டவ் வெடிப்புகளும் இல்லை என்பதையும் பெண்ணைப் பெற்றவர்கள் மகிழ்வோடு இருக்கிறார்கள் என்பதும் அங்கு சென்று வந்தவர்கள் அறிவார்கள். பெண்கள் இன்று மஹர் தொகையை அளவுக்கு மீறி கேட்பதால் பல இளைஞர்கள் திருமணம் செய்ய முடியாமல் கஷ்டப் படுகிறார்கள் என்பதும் அரசாங்கங்கள் அவர்களுக்கு உதவித்தொகை கொடுக்கும் நிலை இருந்து வருகிறது.

# திருமணத்தின்போது சிற்றுரை

நபிகளார் கற்றுத்தந்த சிற்றுரை: நிச்சயமாக புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே! அவனிடமே உதவி தேடுகிறோம். அவனிடமே பாவமன்னிப்பு தேடுகிறோம். எங்கள் உள்ளங்களின் தீங்குகளை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாப்பு தேடுகிறோம். யாருக்கு அல்லாஹ் நேர்வழி காட்டினானோ அவனை வழிகெடுப்போன் யாருமில்லை. யாரை அல்லாஹ் வழிதவறச் செய்து விட்டானோ அவனுக்கு நேர்வழி காட்டுவோன் யாரும் இல்லை. வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர யாருமில்லை என்று நான் உறுதியாக நம்புகிறேன். முஹம்மத் (ஸல்) அவர்கள் அவனது அடியாரும் தூதருமாவார்கள் என்றும் உறுதியாக நம்புகிறேன்.

(அல்லாஹ் என்றால் 'வணக்கத்துக்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன்' என்று பொருள்)

● இறைவிசுவாசிகளே இறைவனை முழுமையாக அஞ்சுங்கள். நீங்கள் முஸ்லிமாக (இறைவனுக்கு அடிபணிந்தவராக) அன்றி மரணிக்க வேண்டாம். (அல்குர்ஆன் 3:102)

● இறைவிசுவாசிகளே நீங்கள் அல்லாஹ்வுக்கு பயந்து கொள்ளுங்கள்: அவனைக் கொண்டே நீங்கள் ஒருவருக்கொருவர் (தமகுரிய உரிமைகளைக்) கேட்டுக் கொள்கிறீர்கள்: மேலும் (உங்கள்) இரத்தக் கலப்புடைய உறவினர்களையும் (ஆதரியுங்கள்) – நிச்சயமாக அல்லாஹ் உங்கள் மீது கண்காணிப்பவனாகவே இருக்கிறான்.(அல்குர்ஆன் 4:1)

● இறைவிசுவாசிகளே சொல்வதை தெளிவாகவும் தீர்க்கமாகவும் சொல்லுங்கள். அல்லாஹ் உங்கள் வணக்கங்களை சீர்செய்வான், உங்களது பாவங்களை மன்னிப்பான். யார் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் கட்டுபட்டு நடக்கிறார்களோ நிச்சயமாக அவர்கள் மிகப்பெரிய வெற்றி பெற்றுவிட்டார்கள்.(அல்குர்ஆன் 33: 70,71)

# பெண் பார்த்து மணம் முடியுங்கள்!

இல்லறம் நல்லறமாக நாம் பேண வேண்டிய அனைத்து வழிமுறைகளையும் நபிகளார் காட்டிச் சென்றார்கள்.... அவரது சொந்த வாழ்வின் மற்றும் அவரோடு வாழ்ந்த தோழர்களின் முன்மாதிரி வாழ்க்கையில் இருந்து மனித குலத்துக்கு பாடங்களாகக் கிடைக்கின்றன.

## பெண் பார்த்தல் இணக்கத்துக்கு வழிகோலும்

● நபித்தோழர் முகீரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: “நான் ஒரு பெண்ணை மணமுடித்துக்கொள்ள பேசியிருந்தேன். இதனை அறிந்த நபி(ஸல்), “நீர் அப்பெண்ணைப் பார்த்துக் கொள்ளும், ஏனெனில் அது உங்களிருவருக்கிடையில் உவப்பையும், நட்பையும், இணக்கத்தையும் ஏற்படுத்தக்கூடும்” என அறிவுரை பகன்றார்கள்.“ ஆதாரங்கள்: நஸயீ, திர்மிதி, முஸ்னத் அஹ்மத்.

## பெண்பார்ப்பதை வலியுறுத்திய நபி

● ஒரு நபித்தோழர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து தான் ஒரு மதீனத்து (அன்சார்) பெண்ணை மணமுடிக்க நிச்சயித்திருப்பதாகக் கூறினார். நபி (ஸல்) அவர்கள் நீர் அப்பெண்ணை நேரில் கண்டீரா? எனக் கேட்டார்கள். அதற்கு நபித் தோழர் “இல்லை” என்றார். நபி (ஸல்) அவர்கள் “நீர் சென்று பார்த்துக் கொள்வீராக!” எனக் கூறினார்கள். அறிவிப்பு: அபூஹூரைரா (ரலி) ஆதாரம்: முஸ்லிம், முஸ்னத் அஹ்மத்.

## பெண்பார்த்தபின் பெண்கேட்ட நபித்தோழர்

● நபி (ஸல்) அவர்களின் அருமை மகள் பாத்திமா (ரலி) அவர்களை நேரில் கண்டு பின் நபி (ஸல்) அவர்களிடம் தனக்கு ஃபாத்திமா (ரலி) அவர்களை மணம் முடித்து தரும்படி அலீ (ரலி) அவர்கள் கோரிக்கை வைத்தார்கள். அதனை ஏற்று நபி (ஸல்) அவர்களும் மணம் முடித்து வைத்தார்கள். ஆதாரம்: இப்னு ஸஃது

## குறுக்கிட்டு சம்பந்தம் பேச தடை

● “ஒருவர் ஒரு பெண்ணை மணம் முடிக்க பேசிக் கொண்டிருக்கையில் மற்றொருவர் அப்பெண்ணை மண முடிக்க (நிச்சயம்) பேசக்கூடாது“ என நபி (ஸல்) அவர்களை வலியுறுத்தினார்கள்.

அறிவிப்பு: அபூஹுரைரா, (ரலி)

ஆதாரங்கள்: புகாரி, முஸ்லிம், அபூதாவூத்,


## திருமண சிறப்பிதழ்

● உங்கள் வீட்டுத் திருமணங்களுக்கு அழைக்கும் போது இந்த இதழை அச்சிட்டு விநியோகம் செய்ய விரும்பினால் எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள். கடைசி வெளி அட்டையில் உங்கள் திருமண அழைப்பிதழும் அச்சடித்துக் கொடுக்கப்படும் (இன்ஷாஅல்லாஹ்). குறைந்த பட்சம் 1000 காப்பிகள் ஆர்டர் செய்யவேண்டும்.

தொடர்புக்கு : **8015714648 / 09886001357**

# இல்வாழ்க்கை இன்புற்றிருக்கவே!

ஆணையும் பெண்ணையும் படைத்த இறைவன் தனது திருமறையில் இவ்வாறு அறிவிக்கின்றான்:

● நீங்கள் மன நிம்மதி பெறுவதற்காக உங்களிலிருந்தே உங்கள் ஜோடிகளைப் படைத்திருப்பதும்: உங்களிடையே அன்பையும், நேசத்தையும் உண்டாக்கிருப்பதும், அவனது அத்தாட்சிகளில் உள்ளனதாகும். சிந்தித்து உணரக்கூடிய சமூகத்திற்கு நிச்சயமாக இதில் (பற்பல) அத்தாட்சிகள் உள்ளன. (அல்குர்ஆன் 30:21)

● அவர்கள் உங்களுக்கு ஆடையாகவும், நீங்கள் அவர்களுக்கு ஆடையாகவும் இருக்கிறீர்கள். (அல்குர்ஆன் 2:187)

● உங்கள் மனைவியர் உங்கள் விளை நிலங்கள் ஆவார்கள். எனவே உங்கள் விருப்பப்படி உங்கள் விளை நிலங்களை அனுபவியுங்கள்.
(அல்குர்ஆன் 2:223)

● நபி (ஸல்) தெளிவாக்கினார்கள்: இவ்வுலகம் இன்பகரமானது, உலக இன்பங்களில் மிகவும் சிறப்பானது நல்ல (ஒழுக்கமான) மனைவியை அடைவதாகும். அறிவிப்பு: இப்னு உமர் (ரலி) ஆதாரங்கள்: முஸ்லிம், முஸ்னத் அஹ்மத்.

● நற்குணமுள்ளவர்கள் இறை நம்பிக்கையில் (ஈமானில்) முழுமையானவர்கள். தனது மனைவியிடம் நல்ல முறையில் நடப்பவர்கள் உண்மையில் நற்குணமுள்ளவர்கள். அறிவிப்பு: அபூஹுரைரா (ரலி) ஆதாரங்கள்: திர்மிதி, முஸ்னத் அஹ்மத்.

இல்வாழ்க்கை இன்பமூட்டுவதே ஆயினும் அது தற்காலிகமானதே! உண்மை விசுவாசிகளுக்கு மறுமையே இதைவிட மேலானது என்பதை அவர்கள் அறிவார்கள்.

● பெண்கள் ஆண்மக்கள் பொன்னிலும், வெள்ளியிலுமான பொற்குவியல்கள்: அடையாளமிடப்பட்ட (உயர்ந்த குதிரைகள், ஆடு, மாடு, ஒட்டகை போன்ற) கால்நடைகள், சாகுபடி நிலங்கள். ஆகியவற்றின் மீதுள்ள இச்சைகள் மனிதர்களுக்கு அழகாகப்பட்டுள்ளது. இவையெல்லாம் இவ்வுலக வாழ்வின் சுகப் பொருட்களாகும். இறைவனிடத்திலோ அழகான தங்குமிடமிருக்கிறது. (அல்குர்ஆன் 3:14)

● செல்வமும், பிள்ளைகளும், இவ்வுலக வாழ்வின் அலங்காரங்களாகும், என்றென்றும் நிலைத்து நிற்கக் கூடியவை நற்கருமங்களே! உம்முடைய இறைவனிடம் நன்மை பயப்பனவாகவும் (அவனிடம்) நம்பிக்கையுடன் ஆதரவு வைக்கத்தக்கவையாகவும் இருக்கின்றன.(அல்குர்ஆன் 18:46)

# தம்பதியரின் கடமைகளும் உரிமைகளும்

ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள உரிமைகள் சமமே என்றாலும் அவர்களின் முரண்பட்ட இயற்கைக்கும் உடலமைப்புக்கும் ஏற்றவாறு குடும்ப வாழ்வில் கடமைகளும் உரிமைகளும் பகிர்ந்தளிக்கிறான் இறைவன். அவற்றைப் பொருந்திக் கொண்டு வாழ்வதில்தான் இம்மையில் அமைதியும் மறுமையில் பரிசாக சொர்க்கமும் கிடைக்கவுள்ளன. குடும்பத்தைப் பொறுத்தவரை அவர்களுக்காக உழைத்து அவர்களைப் பராமரிக்கும் பொறுப்பு கணவன் மீது சுமத்தப் பட்டுள்ளது. இன்னும் குடும்பத்தை நிர்வகிக்கும் தலைமைப் பொறுப்பும் அவன் மீதே சுமத்தப் படுகிறது.

● நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : நீங்கள் ஒவ்வொருவரும் பொறுப்பாளியே. நீங்கள் ஒவ்வொருவரும் அவரவர் பொறுப்பு குறித்து (மறுமையில்) விசாரிக்கப் படுவீர்கள்: (ஆட்சித்) தலைவரும் பொறுப்பாளரே. ஆண்மகனும் தன் மனைவி மக்களின் பொறுப்பாளன் ஆவான். பெண் தன் கணவனின் வீட்டுக்கும் அவனுடைய குழந்தைகளுக்கும் பொறுப்பாளியாவாள். ஆக, நீங்கள் ஒவ்வொருவரும் பொறுப்பாளரே. நீங்கள் ஒவ்வொருவரும் தத்தமது பொறுப்பு குறித்து விசாரிக்கப்படுவீர்கள்.

அறிவிப்பவர் : இப்னு உமர் (ரலி)

நூல் : புகாரி (5200)

நபி(ஸல்) அவர்கள் தனது இறுதி உபதேசத்தில் இவ்வாறு கூறினார்கள்:

“அறிந்து கொள்ளுங்கள்! பெண்களிடம் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள் என நான் உங்களுக்கு உபதேசிப்பதை ஏற்றுக் கொள்ளுங்கள்! நிச்சயமாக அவர்கள் உங்களிடத்திலே உதவியாளர்களாகவே இருக்கிறார்கள். அதைத்தவிர வேறெதையும் நீங்கள் உரிமையாக்கிக் கொள்ள முடியாது அவர்கள் பகிரங்கமான மானக்கேடான விஷயங்களில் ஈடுபட்டாலே தவிர! அவ்வாறு அவர்கள் ஈடுபட்டால் படுக்கையிலிருந்து அவர்களை ஒதுக்கி வையுங்கள். அவர்களை காயம் ஏற்படாத வகையில் அடியுங்கள். அவர்கள் உங்களுக்குக் கட்டுப்பட்டுவிட்டால் அவர்கள் மீது எந்த மாற்று வழியையும் தேடாதீர்கள்.

அறிந்து கொள்ளுங்கள்! உங்களுக்கு உங்கள் மனைவியர் மீது சில உரிமைகள் உள்ளன. உங்கள் மனைவியருக்கு உங்கள் மீது சில உரிமைகள் உள்ளன. அவர்கள் மீதான உங்கள் உரிமை என்பது, உங்களுக்கு வெறுப்பானவர் எவரையும் உங்களது விரிப்பை மிதிக்க அனுமதிக்காமல் இருப்பதும், உங்களுக்கு வெறுப்பானவர்களை உங்கள் வீட்டினுள் அனுமதிக்காமல் இருப்பதுமாகும்.

அறிந்து கொள்ளுங்கள்! உங்கள் மீதான அவர்களுடைய உரிமை என்பது, ஆடையிலும் உணவிலும் நீங்கள் அவர்களுக்கு அழகிய முறையில் நடந்து கொள்வதாகும்.” (ஜாமிவுத் திர்மிதி)

# கணவனின் கடமைகள்

● மனைவிக்கு கணவன் செய்ய வேண்டிய கடமைகள் யாவை? என நபி (ஸல்) அவர்களிடம் வினவப்பட்டது. அதற்கு நபி (ஸல்) அவர்கள் நீர் உண்ணும்போது அவளுக்கு உணவளிப்பதும், நீர் அணியும் போது அவளையும் அணியச் செய்வதும், அவளது முகத்தில் அறையாதிருப்பதும், அவளை (தீய சொற்களால்) இழிவு படுத்தாதிருப்பதும், வீட்டில் தவிர (வெளியிடங்களில்) அவளைக் கண்டிக்காதிருப்பதும் (கணவனின் கடமை) என்று நபி (ஸல்) அறிவுறுத்தினார்கள்.

அறிவிப்பு: முஆவியா (ரலி) ஆதாரங்கள்: அபூதாவூத், அஹ்மத்.

● நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள்: இறைவனின் திருப்தியை நாடி நீ (உன் மனைவிக்கு) செலவு செய்த எந்த செலவுக்கும், ஏன்? உன் மனைவிக்கு அன்புடன் நீர் ஊட்டிவிட்ட உணவுக்கும் இறைவன் கூலி கொடுக்காமல் இருப்பதில்லை.

அறிவிப்பு: ஸஃது இப்னு அபிவக்காஸ் (ரலி) ஆதாரங்கள்: புகாரி, முஸ்லிம்

● ஒருவன் தனது குடும்பத்திற்காக செய்யும் அனைத்து செலவுகளும் இறைவனிடம் (நன்மைகளாக) கணக்கிடப்படுகிறது. அவை அவன் செய்யும் தானதர்மமாகிறது.

அறிவிப்பு: இப்னு மஸ்ஊத் அல்-பத்ரி (ரலி) ஆதாரங்கள்: புகாரி, முஸ்லிம்,

● ஒருவர் இறைவனின் பொருத்தத்தை நாடி தனது செல்வத்தை அடிமையை விடுவிப்பதற்காகவும், ஏழைகளுக்கு தர்மமாகவும், அனாதைகளுக்கு உதவியாகவும், தனது மனைவி, மக்களை செம்மையாக வைத்திருக்கவும் செலவு செய்கிறார். இவற்றில் தனது மனைவி மக்களுக்கு செலவிட்டதே அனைத்து செயல்களிலும் மேலானதாகும்.

அறிவிப்பு: அபூஹுரைரா (ரலி) ஆதாரங்கள்: முஸ்லிம், முஸ்னத் அஹ்மத்

● பெண்கள் வளைந்த எலும்பால் படைக்கப்பட்டவர்கள் அதனை நிமிர்த்த முயன்றால் அதனை உடைத்து விடுவாய் அந்த வளைவு இருக்கும் நிலையிலேயே அவளை விட்டுவிட்டால் அவளிடம் இன்பம் பெறுவாய் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பு: அபூஹுரைரா (ரலி) ஆதாரங்கள்: முஸ்லிம், முஸ்னத் அஹ்மத்,

● ஒரு இறைநம்பிக்கையுடைய ஆண், இறைநம்பிக்கையுடைய தன் மனைவியை வெறுத்து விட வேண்டாம். அவளது ஒரு குணத்தை அவன் வெறுத்தால், அவன் விரும்பக்கூடிய வேறொரு குணத்தை அவளிடம் அவன் காணலாம் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பு: அபூஹுரைரா (ரலி) ஆதாரங்கள்: முஸ்லிம், முஸ்னத் அஹ்மத்.

● பெண்களை நல்லமுறையில் நடத்துங்கள், அவர்கள் உங்களிடம் அடைக்கலமாக உள்ளவர்கள். அதைத் தவிர அவர்களிடம் உங்களுக்கு வேறு எந்த உரிமை இல்லை என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பு: உம்மு ஸல்மா (ரலி), ஆதாரங்கள்: திர்மிதி, இப்னுமாஜா.

# மனைவியின் கடமைகள்

குடும்பங்கள் மட்டுமல்ல எந்த ஒரு அமைப்பும் ஆரோக்கியமான முறையில் செயல்படுவதற்கும் அங்கு உருவாகும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும் அவற்றை நடைமுறைப்படுத்தவும் வலுவான தலைமையும் தலைமைக்குக் கட்டுப்படும் தொண்டர்களும் தேவை. அந்த வகையில் இறைவன் ஆணுக்கு அவனது கடமை கருதி இப்பொறுப்பை சுமத்துகிறான்.

● **(ஆண், பெண் இருபாலாரில்) இறைவன் சிலரை சிலரைவிட மேன்மைப்படுத்தி வைத்திருக்கிறான். (ஆண்கள்) தங்கள் சொத்துகளிலிருந்து (பெண் பாலாருக்காகச்) செலவு செய்து வருவதினாலும், ஆண்கள் பெண்களை நிர்வகிக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர். எனவே நல்லொழுக்கமுடைய பெண்டிர் (தங்கள் கணவன்மார்களிடம்) விசுவாசமாகவும், பணிந்தும் நடப்பார்கள். (தங்கள் கணவன்மார்கள்) இல்லாத சமயத்தில், பாதுகாக்கப்பட வேண்டியவற்றை, இறைவனின் பாதுகாவல் கொண்டு, பாதுகாத்துக் கொள்வார்கள். (அல்குர்ஆன்: 4:34)**

● ஒரு பெண் தனது ஐவேளைத் தொழுகையை (செம்மையாக) தொழுது (ரமழான்) மாதத்தில் நோன்பு நோற்று, தனது கற்பையும் காத்துக்கொண்டு (இறை ஆணைகளுக்கு மாற்றமில்லாத காரியங்களில்) தன் கணவனுக்குக் கட்டுப்பட்டு நடந்து கொண்டால், “நீ விரும்பும் எந்த வாயில் வழியாக வேண்டுமானாலும் சுவர்க்கத்தில் நுழையலாம்“ என அவளிடம் (மறுமையில்) கூறப்படும் என நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள்.

அறிவிப்பு: அப்துர்ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) ஆதாரங்கள்: தப்ரானி, முஸ்னத் அஹ்மத்.

● கணவன் தாம்பத்யத்திற்காக மனைவியை அழைத்து, அவள் தேவையின்றி மறுக்கிறாள். அதனால் கணவன் அவள் மீது கோபங்கொண்டு அவ்விரவைக் கழித்தால், வானவர்கள் விடியும் வரை அப்பெண்ணை சபித்துக்கொண்டே இருப்பார்கள் என நபி (ஸல்) அவர்கள் எச்சரித்தார்கள்.

அறிவிப்பு: அபூஹுரைரா (ரலி), ஆதாரங்கள்: புகாரி, முஸ்லிம், அஹ்மத்.

● நபி (ஸல்) அவர்கள் தெளிவாக்கினார்கள்: கணவன் ஊரிலிருக்கும் போது அவனது அனுமதியின்றி எந்தப் பெண்ணும் (கடமையில்லாத உபரியான) நோன்பு நோற்பது கூடாது. மேலும் தனது வீட்டில் கணவன் அனுமதியின்றி எவரையும் அனுமதிக்கக் கூடாது.

அறிவிப்பு: அபூஹுரைரா (ரலி) ஆதாரங்கள்: முஸ்லிம், புகாரி,

● ஒரு பெண் தன் கணவனது திருப்தியைப் பெற்ற நிலையில் மரணித்துவிட்டால் அவள் சொர்க்கத்தில் நுழைவாள் என நபி (ஸல்) அவர்கள் அருளினார்கள்.

அறிவிப்பு: உம்மு ஸல்மா (ரலி), ஆதாரங்கள்: திர்மிதி, இப்னுமாஜா

● ஒரு மனிதன் இன்னொரு மனிதனுக்கு சாஷ்டாங்கம் (ஸஜ்தா) செய்வதை இறைவன் அனுமதித்து இருந்தால் மனைவி கணவனுக்கு தலை வணங்கி சாஷ்டாங்கம் (ஸஜ்தா) செய்ய ஆணையிட்டிருப்பேன். (என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அந்த அளவுக்கு கட்டுப்பாடு அவசியம்)

அறிவிப்பு: அபூஹுரைரா(ரலி) ஆதாரங்கள்: அபூதாவூத், நஸயீ, திர்மிதி,

# குழந்தை செல்வங்களைக் காப்போம்

குழந்தை பிறப்பு என்பது உலகில் இயற்கையானது. ஆனால் மனிதன் தான் பெற்ற குழந்தை தன் உணவில் பங்கு கேட்குமோ என்றும் தன் ஆடம்பரம் மற்றும் வசதிகள் குறைந்துவிடுமோ என்று தரம்தாழ்ந்து சிந்திக்க ஆரம்பித்தான். அதன் விளைவாக தன் சுயநலம் மற்றும் பொறுப்பின்மை மேலிட தான் பெற்ற குழந்தைகளை ஈவிரக்கமின்றி கொன்று குவித்தான். எந்த விலங்குகளும் கூட செய்யத் துணியாத அந்த கருணையற்ற அற்ற செயல் அது! அச்செயலை குடும்பக் கட்டுப்பாடு என்று அழகிய பெயர் சூட்டி சமூகமும் ஆமோதித்தது.

நாட்டு வளங்களை முறைப்படி கையாளத் திறமையில்லாத சுயநல அரசியல் வாதிகளும் அதைத் தங்கள் குறைகளை மறைக்கக் கேடயமாக பயன்படுத்திக் கொண்டனர். ஊழலால் நாட்டைக் கொள்ளை அடித்தவர்கள் மக்கள் தொகைப் பெருக்கமே நாடு முன்னேறாததற்குக் காரணம் என்று மக்களுக்கு மூளைச்சலவை செய்தனர்.

அழகிய சொல்லாடல்களைக் கையாண்டனர். நாளும் பொழுதும் ஊடகங்கள் மூலம் மக்களை மூளைச்சலவை செய்தனர். "நாமிருவர் நமக்கு மூவர்'' என்று தொடங்கி மூவர் இருவராகி இறுதியில் "நாமிருவர் நமக்கு ஒருவர்" என்று சுருக்கினர். இன்னும் சில சமூகப் பொறுப்பில்லாத கயவர்கள் "நாமே இருவர், நமக்கு ஏன் இன்னொருவர்?" என்று சிந்திக்கவும் செயல்படுத்தவும் செய்தனர். அப்படி இருக்கும்போது அந்த ஒருவர் பெண்ணாய் வந்துவிட்டால் என்ன நடக்கும்? அனைவருக்கும் தெரிந்ததே! ஆம், பெண் இனம் பல்வேறு விதமாக கொன்றொழிக்கப்பட்டது. பிறக்கும் முன்பே மருத்துவ மனைகளில் அவளைக் கொன்றார்கள், தப்பித் தவறி பிறந்துவிட்டால் கள்ளிப் பாலும் அரிசிமணிகளும் அவளைப் பதம் பார்த்தன! இவ்வாறு எந்தக் குற்ற உணர்வும் இல்லாமல் இந்த கூட்டக் கொலைகள் நாடு எங்கும் நிறைவேறின. இன்னும் நிறைவேறிக் கொண்டுவருகின்றன. நாட்டில் வனவிலங்குகளும் கால்நடைகளும் அழிவது கண்டு முதலைக்கண்ணீர் வடித்த "மனிதாபிமானிகளுக்கு' தன் இனம் அழிவது கண்டு அழுகை வரவில்லை! என்ன ஆச்சரியம்! சமூகத்தில் மனித உணர்வுகளை, ஆசாபாசங்களை, பாச நேசங்களை சமநிலைப்படுத்த இறைவன் வழங்கிய பெண்மை என்ற ஒரு மாபெரும் பொக்கிஷத்தை அறியாமையின் காரணமாக தொலைத்துகொண்டு நிற்கிறது மனித இனம்!

அரசாங்க புள்ளிவிவரப்படி பெண் கருக்கொலை என்பது இந்தியாவில் இப்போது தடையற்ற ஒரு நிகழ்வாகி இருக்கிறது. குறிப்பாக மத்திய வர்க்கம் மற்றும் மேல்தட்டு மக்களிடம் கருவின் பாலியல் அடையாளத்தை வெளியிடக்கூடாது என்ற சட்டம் இருந்தாலும் ஒவ்வொரு வருடமும் 1 மில்லியன் பெண் கருக்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட முறையில் அழிக்கப்படுகிறது. இன்னும் சில வருடங்களில் 2 முதல் 5 மில்லியன் என உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## பெண்ணுரிமைவாதிகள் எங்கே?

பெண்களை ஒருபுறம் கொன்றோதுக்கி விட்டு மறுபுறம் பெண்ணுக்கு உரிமை வேண்டுமாம்! அவளுக்கு இவ்வுலகில் நுழைவதற்கே தடை விதித்துவிட்டு வாய்கிழிய முழக்கமிடும் பெண்ணுரிமைவாதிகளும் மாதர் சங்கங்களும் யாருக்காகப் போராடுகிறார்கள்? தொடரும் இக்கொடுமைக்கு எதிராக அவர்களின் குரல்கள் மௌனமாகும் மர்மம என்ன? பெண்ணின் முதல் உரிமை அவளுக்கு பிறக்கும் உரிமை! இதைப் பாதுகாக்க என்ன செயல்திட்டம் வைத்திருக்கிறார்கள் அவர்கள்?

## உலகை சீரமைப்போம் வாரீர்!

யார் எப்படி செயல்பட்டாலும் சரி, செயல்படாவிடினும் சரி, இறைவனை நம்பி அவனுக்கு அடிபணிந்து வாழ தங்களை அர்ப்பணித்துக்கொண்ட நன்மக்கள் இத்தீமை இனியும் சமூகத்தில் பரவாமல் தடுக்க ஆவன செய்யவேண்டும். இறைவன் கூறும் வாழ்க்கை நெறியைப் பின்பற்றுவோரிடம் இத்தீமை நடைபெறுவதில்லை! இன்று வாழ்வோரையும் இனி வரும் தலைமுறகளையும் இக்கொடுமையின் ஆபத்து பற்றி உரிய முறையில் எச்சரிப்பது நமது கடமை.

இது இறைவனுக்கு சொந்தமான உலகம். அவன் விதித்த கட்டளைகளை மீறி வாழ்ந்ததன் விளைவுகளே இன்று நாம் கண்டுவரும் கொடுமைகள். ஒருவேளை நாம் இவ்வுலகில் நம் அத்துமீறல்களுக்கான தண்டனையைப் பெறாவிட்டாலும், மறுமை வாழ்வில் அதைப் பெற்றேயாக வேண்டும்.

● கண்ணுக்குத் தெரியும் உயிராயினும் தெரியாத உயிராயினும் சரி பெரிதாயினும் சிறிதாயினும் அவற்றை அநியாயமாக நோவினை செய்தாலோ அல்லது கொன்றாலோ அது இறைவனிடம் பாவமே! மறுமை நாளில் அதற்கான விசாரணை உண்டு. அந்த வகையில் சிசுக்கொலைகளுக்கும் தண்டனை உண்டு என்று இறைவன் எச்சரிக்கிறான்

***17:31 நீங்கள் வறுமைக்குப் பயந்து உங்களுடைய குழந்தைகளைக் கொலை செய்யாதீர்கள் அவர்களுக்கும் உங்களுக்கும் நாமே உணவை (வாழ்க்கை வசதிகளையும்) அளிக்கின்றோம் – அவர்களைக் கொல்லுதல் நிச்சயமாகப் பெரும் பிழையாகும்.***

● இன்று பெண்குழந்தைகள் என்றால் ஸ்கேன் செய்து பார்த்து கொல்லும் பெற்றோர்கள் நாளை மறுமை நாளில் தண்டனைக்குள்ளாவார்கள். அவர்களால் கொல்லப்பட்ட குழந்தைகளே அவர்கள் செய்த குற்றத்திற்கு சாட்சியாக நிற்பார்கள்

***81:7–9 உயிர்கள் ஒன்றிணைக்கப்படும் போது– உயிருடன் புதைக்கப்பட்ட பெண் (குழந்தை) வினவப்படும் போது– "எந்தக் குற்றத்திற்காக அது கொல்லப்பட்டது?" என்று–***

இறைவிசுவாசிகளே வாருங்கள், நாத்திகர்களை நம்பி உங்கள் இனங்களை நீங்களே அழித்து விடாதீர்கள். இறைவனின் வாக்குகளை நம்புங்கள். குழந்தைகளை அதிலும் குறிப்பாக பெண் குழந்தைகளை அரிய பொக்கிஷமாக கருதி போற்றி வளருங்கள். இறைவனின் தூதர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:'எவருக்கு பெண் பிள்ளைகள் இருந்து அவர்களை அன்பு காட்டி அடைக்கலம் கொடுத்து பொறுப்புடன் நடத்துவாரோ அவருக்கு சுவர்க்கம் கடமையாகி விட்டது" (ஆதாரம்:அஹ்மத்)

# வாசகர் எண்ணம்

● ஆகஸ்ட் இதழில் 'பயங்கரவாதத்தை வேர் அறிந்து அழிப்போம்' என்ற கட்டுரை மாற்றுக் கருத்துக் கண்ணோட்டத்தில் இருக்கும் சகோதர சமயத்தினருக்கு நல்லதொரு தெளிவினை தருகிறது. மனிதர்கள் அனைவரும் சீப்பின் பற்களைப் போன்று சமமானவர்கள் என்ற நபிகள் நாயகத் திருமேனியின் பொன்மொழி சமநிலைச் சமுதாயத்தின் வித்தாக உள்ளது. நபிகளாரின் போர்நெறிகள் அவரை அஹிம்சாமூர்த்தியாகவே அடையாளப் படுத்துகிறது. **–கே. ஆர். சுந்தர்ராஜன், சுவாதி முதியோர் இல்லம், தஞ்சாவூர்.**

● ஆகஸ்ட் இதழில் பயங்கரவாதம் (*Terrorism*) என்ற சொல் எங்கு எப்படி உருவானது, அதற்கு இன்று பூசப்படும் சாயம் என்ன? என்பது பற்றி விளக்கமாக கூறப்பட்டு இருந்தது. மிக்க நன்றி. இந்த விஷயங்களை ஒவ்வொரு முஸ்லிமும் தெரிந்து கொண்டு மாற்றுமத நண்பர்களுக்கும் தெரியப்படுத்த வேண்டும். – **மவ்லவி தையிப் தாவூதி, ஈரோடு**

● ஆகஸ்ட் இதழ் பற்றி... நபிகளாரின் போர்நெறிகள் அனைத்து மனித குலத்துக்கும் சிறந்த முன்மாதிரியாக உள்ளன. அவரது நற்குணங்களும் முழு வாழ்க்கையும் அன்பினாலும் பாசத்தினாலும் நிறைந்துள்ளன. அனைவரும் அவரைப் பின்பற்றினால் உலகில் பயங்கரவாதமே இருக்காது. ஒரு உண்மை முஸ்லிம் ஒருபோதும் பயங்கரவாதி ஆக முடியாது.

– **ஏ. சி பிரபாகரன், அல்சூர், பெங்களூர் (*SMS* மூலம்)**

● ஆகஸ்ட் இதழ் பயங்கரவாத சிறப்பிதழாக மலர்ந்துள்ளது. முஹம்மது நபி (ஸல்) அவர்களின் முறையில் பயங்கரவாதத்தை எதிர்கொள்வோம். மாஷா அல்லாஹ். உங்கள் பணி தொடர வாழ்த்துக்கள்.

– **எ.எம். முஹம்மது நதீர், கடையநல்லூர் (*SMS* மூலம்)**

## நபிகளாரைக்கூட அழைக்காமல் திருமணம்!

நபி (ஸல்) அவர்கள் வாழ்ந்த காலத்தில் மதினாவில் பெரும் செல்வந்தராக இருந்த அப்துர்ரஹ்மான்பின் அவ்ஃப் (ரலி) என்ற நபித்தோழர் ஒரு அன்சாரி பெண்ணை மணம் முடித்தார்கள். அத்திருமணத்திற்கு நபி (ஸல்) அவர்களுக்கு அழைப்பு கொடுக்கப்படவில்லை. மறுநாள் காலை அப்துர்ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் தொழுகைக்கு வந்தார்கள். அவரது உடையில் மஞ்சள் நிற வாசனை பொருளின் கறை இருப்பதைக் கண்ட நபி (ஸல்) அவர்கள் என்ன விசேஷம்? என வினவினார்கள். தனக்கு முந்திய இரவு திருமணம் நடந்தது. தான் ஒரு மதீனத்துப் (அன்சாரிப்) பெண்ணை மணம் முடித்தேன் என பதிலளித்தார்கள்.

நபி (ஸல்) எவ்வளவு மஹர் கொடுத்தாய்? என வினவினார்கள். இப்னு அவஃப் (ரலி) ஒரு பேரித்தம் பழமளவு தங்கம்! என பதிலளித்தார்கள். அதற்கு நபி (ஸல்) ஒரு ஆட்டையாவது அறுத்து வலீமா விருந்து வைப்பீராக என்றார்கள்.

அறிவிப்பு: அனஸ் பின் மாலிக் (ரலி) ஆதாரங்கள்: முஅத்தா மாலிகி, புகாரி,

